அடுத்ததாக, மாற்றுத் திறனாளிகள் நலத் துறையைப் பொறுத்தவரைக்கும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள். அரை மணி நேரத்திற்கும் மேலாகிறது, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள்.

7. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகளுக்கேற்ப அமையும் சட்டமன்றப் பேரவையின் நிகழ்ச்சிகளை உள்ளடக்கும் நிகழ்ச்சி நிரலை இப்போது அறிவிக்கிறேன்.

22–3–2020 (ஞாயிற்றுக்கிழமை)– அரசு விடுமுறை; 23–3–2020 அன்று 2019–2020 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல், வாக்கெடுப்பு மற்றும் நிதியொதுக்க சட்டமுன்வடிவு–அறிமுகம் செய்தலும், ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் (விவாதமின்றி), 2020–2021 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவைமுன் வைத்தல், வாக்கெடுப்பு மற்றும் நிதியொதுக்கச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தலும், ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் (விவாதமின்றி); அதைத் தொடர்ந்து கைத்தறி மற்றும் துணிநூல் துறையினுடைய மானியக் கோரிக்கை; செய்தி மற்றும் விளம்பரத் துறை (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கை; எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கைகள் அன்றைக்கு விவாதிக்கப்படும்.

24–3–2020 அன்று முற்பகலில் தொழில் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையினுடைய மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும், பிற்பகலில் வணிக வரிகள், முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு, பால் வளம் ஆகிய துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

2020 மார்ச் 21] [பேரவைத் தலைவர்]

25–3–2020 அன்று தெலுங்கு வருடப் பிறப்பு–அரசு விடுமுறை;

26–3–2020 அன்று முற்பகல்–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை; பிற்பகல்–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), போக்குவரத்துத் துறை.

27–3–2020 அன்று முற்பகல்–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை); பிற்பகல்–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை); இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை).

28–3–2020 அன்று முற்பகல்–வேளாண்மைத் துறை; பிற்பகல்–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை).

29–3–2020 அன்று அரசு விடுமுறை;

30–3–2020 அன்று முற்பகல்–தகவல் தொழில் நுட்பவியல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு; பிற்பகல்–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை).

31–3–2020 முற்பகல்–பொதுத் துறை, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், சட்டமுன்வடிவுகள்–ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். ஏனைய அரசினர் அலுவல்கள் இருந்தால் அதுவும் எடுத்துக்கொள்ளப்படும்.

31–3–2020 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவை முற்பகலில் 10–00 மணிக்கும், பிற்பகலில் 5–00 மணிக்கும் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.